உ

# மகோற்சவ தத்துவங்கள்



நன்றி

கட்டுரை ஆக்கம்

பேராசிரியர் கலாநிதி **ப. கோபாலகிருஷ்ண ஐயர்**

தலைவர், இந்து நாகரிகத்துறை,

யாழ். பல்கலைக்கழகம்

★

"சப்பர வெள்ளோட்ட மலர்"

காரைக்கால் சிவன் கோயில் தேவஸ்தானம்

இணுவில் – கோண்டாவில்

★

வெளியீடு: **நடராசா சச்சிதானந்தன்**

நிறுவுனர், இலண்டன் சிவன் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகோற்சவ தத்துவம்

ஆகமங்கள் உயர்ந்த ஆன்மீக அனுபவத்தைப் பெறுவதற்கான வழிமுறைகளை எடுத்துக்கூறும் பிரமாண நூல்கள் ஆலயங்கள், ஆலயக் கிரியைகளை கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என்ற ஒழுங்கில் கூறுகின்றன. இவற்றின் மூலம் பெறப்படும் உயர்ந்த அனுபவத்தைப் பற்றிச் சித்தாந்த சாத்திர நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. எனவே வாழ்நாளில் சமய அனுபவத்தை வளர்த்துக் கொள்ளும் வகையில் சைவசமயி ஒருவன் ஆகமங்கள் கூறும் கிரியைநெறியில் ஈடுபடவேண்டியவனாகின்றான். ஆலயங்களில் பரார்த்த நிலையில் நிகழ்த்தப்படும் கிரியைகள் பக்திநெறிக்கும் அனுகூலமானவை உருவமும் நாமமும் கடந்த முழுமுதற் கடவுளுக்கு உருவமும் நாமமும் கொடுத்து திருக்கோயிலில் எழுந்தருளச்செய்து அப்பரம் பொருளை ஆன்மா வழிபடுவதற்குரிய வழிமுறைகளை ஆகமங்கள் வகுத்துள்ளன.

இறைவன் வாழ்வுக்குரிய எல்லாக் கருவி, கரணங்களையும் தந்தாலும் தானே உடனிருந்து தோன்றாத்துணையாக விளங்கி வாழ்விப்பதாலும் அவனிடத்து நன்றியுடன் இருப்பதும் பணிபுரிவதும் அன்பு செலுத்துவதும் நமது கடமையாகின்றது. இறைவனிடத்தே பக்தி பூண்டவன் எனத்தானும் தன்னைக் கருதும் பக்தனொருவன் இவ்வுலகம் எல்லோருக்கும் பொதுவானது என்றும் வாழ்ந்து பிறரையும் வாழ்வித்தலே பக்தியின் உண்மைத் தன்மை என்றும் உணரு வான். பக்தனுக்கு இத்தகைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்திநெறியின் உயர் தத்துவத்தை உணர்த்துவதே மகோற்சவம் ஆகும்.

"உற்சவம்" என்னுஞ்சொல் ஐந்தொழில்களில் ஒன்றாகிய சிருஷ்டியைக் குறிக்கும் எனக் கிரியை நூல்கள் விளக்கம் தருகின்றன. ஆலயத்தின் கருவறையில் உள்ள மூலவர் உற்சவ மூர்த்தி என்ற பெயருடன் ஆலயத்திலிருந்து வெளிவீதியில் பவனி வருதல் உற்சவம் என அழைக்கப்படுகின்றது. ஐந்து நாட்களுக்கு மேல் தொடர்ந்து செய்யும் வீதியுலாவிற்கு மகோற்சவம் அல்லது பிரம்மோற்சவம் எனப் பெயர் வழங்கப்படுகின்றது. "மக இதி பிரஹ்ம" என்ற பிரமாணத்தினால் மகோற்சவமும் பிரம் மோற்சவமும் ஒரே பொருளைத் தருவன.

உயிர்கள் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் வினைத் திட்பத்தால் நல்வினை, தீவினை வயப்பட்டு உழலுகின்ற நிலையில் எல்லா வினைகளையும் திருநோக்கால் அகற்றி ஆணவமான படலங்கிழித்து தன்மயமாக்கும் தனிப்பெருங்கருணைப் பொழிவே உற்சவமென மேலோர் கண்டுவந்தனர். இதன் பிரிவுகள் பலவகைக் கிருத்தியங்களைச் சுட்டியமைவதாகக் கிரியை நூல்கள் விளக்கத் தருகின்றன. அங்குரார்ப்பணம், துவஜாரோகணம், ரஷபந்தனம், திருக்கல்யாணம் ஆகியன சிருஷ்டி எனப்படும் படைத்தலையும், ஹோமம் பலி, வாகனங்களில் இறைவன் உலாவருதல் என்பன திதியாகிக் காத்தலையும் சூர்ணோற்சவம், ரதாரோஹணம் ஆகியவை சம்ஹாரம் எனப்படும். அழித் தலையும் மௌனோற்சவம், திரோபாவம் ஆகிய மறைத்தலையும் ஊஞ்சல் திருவிழா அனுக்கிரகம் எனப்படும் அருளலையும் குறிக்கும் என்பது சமய நூல்களின் விளக்கமாகும்.

உற்சவமானது யாவருக்குமுரிய தீட்சை காலமாதலால் உற்சவத்தின் பெருமையும் சிறப்பும் அளவிடற்கரியது. இக் காலத்தில் தீட்சை பெறுங்காலத்திலே நடக்கவேண்டிய முறைப் படி, அந்த ஊரில் உள்ளவர்களும், அயல் ஊர்களில் இருந்து கோயிலுக்கு செல்கின்றவர்களும் நடந்துகொள்ளக் கடமைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவர்கள் ஆவர். உற்சவமானது சாம்பவி என்ற தீட்சை என்று உத்தரகாரணகமம். மகோற்சவ வீதிப்படலத்தில் கூறுகின்றது.

எம்பெருமான் தீட்சையில் மண்டலம், கும்பம், அக்கினி, ஆசாரியார், சிஷயர் ஆகிய ஐந்து இடங்களில் நின்று அருள் செய்பவராவர். சாம்பவி தீட்சையாகிய உற்சவத்திலும் அவ்விதியே ஐந்து இடங்களில் நின்று அருள் புரிபவர் மகோற்சவ காலத்தில் இடம்பெறும் பல்வேறு அம்சங்கள் இந்நிலையில் முக்கியத்துவம் பெறுகின்றன. உற்சவம் சாம்பவி தீட்சைக்கு சமமெனக் கருதப் படுவதால் ஆகமங்கள் சிறப்பித்துக்கூறும் மகோற்சவங்கள் அடியார்களைப் பொறுத்தவரை சமய அனுட்டானத்திற்குரிய புண்ணிய தினங்களாக விளங்குகின்றன.

மகோற்சவ காலத்தில் திருக்கோயில் புதுப்பொலிவு பெற்று விளங்கும் நித்திய கிரியைகளின் போது ஏற்படும் குறைகளையும் லோபங்களையும் நிறைவுசெய்து தெய்வீகப் பொலிவை ஏற்படுத் துவதற்கென மகோற்சவங்கள் நிகழ்த்தப்படுகின்றன. மகோற்ச வத்தின்போது பிரதானமாக இடம்பெறுவது துவஜாரோஹணம் என அழைக்கப்படும் கொடியேற்றம் என்னுங் கிரியையாகும். துவஜா ரோஹணத்திற்குரிய கொடிச்சீலை பற்றி இங்கு சிந்திப்பதும் பொருத்தமாகும். கொடியேற்றப்படும் கோயிலையொட்டிக் கொடிச் சீலையில் இடம்பெறும் அம்சங்கள் வேறுபடுவன. சிவாலயமாயின் சிவனுக்குரிய விஷபமும் எம்பெருமானது படைக்கலமான சூலமும் இடம்பெறும். விநாயகருக்கு நிகழ்வின் மூஷிகமும் அங்குசமும் இடம்பெறும். முருகனுக்குரிய உற்சவ மாயின் மயூரமும் சக்தியும் இடம்பெறும். கொடிச்சீலையில் இவற்றுடன் கண்ணாடி, பூர்ணகும்பம் முதலிய அஷ்ட மங்கலப் பொருட்களுடன் சூரியன், சந்திரன் ஆகியோரும் இடம்பெறுவர்.

மகோற்சவத்திற்கு இன்றியமையாதனவாகிய கொடிமரம், கொடிச்சீலை, அஸ்திர தேவர், பலிபீடம் ஆகிய நான்கினுக்கும் பிரதிஷ்டையின் பொருட்டு உரிய கிரியைகள் நிகழ்த்துவதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்திரதேவர் சிவனது கிரியை சக்தியை குறிப்பதாகும். துவஜாரோகணத்தின்போது உற்சவ மூர்த்தியை உரியவாறு அலங்கரித்து வலமாகக் கொடிமரத்தின் முன் எழுந்தருளச் செய்த தன் பின் கொடிச்சீலையைக் கோவிலை வலமாகக் கொண்டு வந்து கொடிமரத்திலுள்ள கயிற்றில் பிணைத்து சமஸ்த தேவதா வாஹனம் என்னுங் கிரியை இடம்பெறுவதாகும். இக்கிரியையின் பொருள் யாதெனில் தேவர்கள் அனைவரையும் எழுந்தருளச் செய்தல் ஆகும். இக்கிரியையில் தெய்வங்கள் அனைவரையும் துவஜண்டத்தில் திருவிழா முடியும்வரை சாந்நித்தியம் கொண்டருளுமாறு வேண்டப்படுவது முக்கிய அம்சமாகும். பின் கொடியை சகல மங்கள வாத்திய கோசங்களுடன் ஏற்றி வலமாகச் சுற்றி தர்ப்பையை சுற்றிலும் பரப்பி இணைத்துக்கட்டி அலங் கரித்தபின்பு, சிவாச்சாரியார் இதற்குரிய பூஜோபசாரங்களை நிகழ்த்துவர். அபிஷேகம், பலிதானம், தூபதீபம், அர்ச்சனை, மகாசீர்வாதம் உற்சவேசருக்குரிய பூஜை, பிரமசந்தி முதலான கிரியைகள் உரியவாறு இடம்பெறும். திக்குகள் அனைத்திலும் அவ்வத்திக்குரியவரைத் தியானித்து அவரவருக்குரிய வேத மந்திர, ராகம், பண், தாளம், வாத்தியம், நிருத்தம் முதலியவற்றுடன் கூடிய ஆவாகனம் நிகழும். சங்கீதம், நாட்டியம் ஆகிய இரண்டும் இக்கிரியையில் விரிவாக இடம்பெறுவது மனங்கொள்ளத்தக்கது.

பிரம்மோற்சவத்தில் பிரதிஷ்டையிற் போன்று பூர்வாங்கக் கிரியைகளுடன் யாகசாலையோடு தொடர்புடைய கிரியைகளும் முக்கிய இடம்பெறும். இந்நைமித்திகக் கிரியை வருடந்தோறும் நிகழுந்தன்மையினால் திருக்கோயிலில் யாகசாலைகளுக்கு நிரந்தர இடமுண்டு. இவ் யாகசாலை கோவிலில் கிழக்குக்கும் வடகிழக்குக்கும் இடையில் இடம்பெறுவதாகும். இங்கு மேற்குப் பக்கத்தில் குண்டமொன்று அமைந்து விளங்கும். பிரமோற்சவ காலத்தில் தினம்தோறும் இரு வேளைகளிலும் யாகபூஜையும், துவஜஸ்தம்பத்திற்கு அபிஷேகம், பூஜை, பலியும் திக்குகளில் பலியும் நிக்ழவன. மற்றும் உற்சவ மூர்த்திக்கு விசேட அபிஷேகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்காரம், தீபாராதனை முதலியனவும் நிகழும். இதனைத் தொடர்ந்து கொடி, குடை, ஆலவட்டம் முதலிய சகல விருது களுடனும் தேவகோஷம், திருமுறை ஓதுதல் முதலியவற்றுடனும் திருவுலா நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. வீதிவலமாக எழுந்தருளி சுவாமி ஈசான மூலையையடைந்ததும் யாகத்தில் பூர்ணாகுதியும், ஆராதனையும் நடைபெறும். மகோற்சவ சகல விரதகாரர்களுக்கு இக்கிரியைகள் மனநிறைவைத்தருபவை. யாகசாலையில் சிவாக்கினியில் ஆகுதி செய்தல், ஆன்மாக்கள் செய்த கன்மங்களை அனுபவத்திற்கு வரவொட்டாது தூய்மை யாக்கும் பாவனையாகும். இறைவனுக்கு லாஜபுஷ்பம் சமர்ப்பித் தாலும் தத்துவச் சிறப்புண்டு. தூய்மையானதும், வெண்மையானது மான நெல்மலரை சுவாமிக்கு சிவாச்சாரியார் சமர்ப்பிப்பது, மலநீக்கம் பெற்ற ஆன்மாக்களைச் சிவத்தோடு சேர்ப்பிக்கும் பாவனையாகும்.

இறைவன் திருவுலாக் கொண்டருளும் போதும் பூஜை நடைபெறும்போது எழுந்து நின்று வழிபடாமல் அக்கிரியை நடைபெறும் இடங்களில் அமர்ந்திருப்பவர் யாவராயினும் தெய்வ நிந்தனை செய்தவர்களாவர். மகோற்சவ காலங்களில் உரிய சமய அனுட்டானங்களைப் பின்பற்றி ஒழுகுபவர்கள் மனத்தூய்மை பெற்று சமய வாழ்வுக்கேற்ற நல்ல ஆன்மாக்களாக விளங்க வழிபிறக்கின்றது. மனிதன் தான் எடுத்த பிறவியின் பயனை அடைவதே மகோற்சவம் போன்ற கிரியைகளின் பயன்பாடு எனக்கூறின் மிகையில்லை.

மகோற்சவ தினங்களில் ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு வாகனமும், ஒவ்வொரு வகை அலங்காரமும், இறைவனுக் குரியவை. பத்ததிகளில் இவை பற்றி வரையறுத்துக் கூறப்பட்டிருப் பினும் அவ்வவ் ஆலயங்களுக்குரிய ஐதீகங்கள் வழமைகள் ஆகியவற்றை அனுசரித்து சிற்சிலவேறுபாடுகள் அனுசரிக்கப் படுகின்றன. உதாரணமாக யாழ்ப்பாணத்தில் உள்ள திருக்கோயில் களில் மகோற்சவ காலங்களில் சப்பறத்திருவிழா கண்கொள்ளாக் காட்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சவங்கள் அறிவுறுத்தும் அடிப்படைத் தத்துவங்களையும் நாம் அறிந்துகொள்வது பயனுடையதாகும். மகோற்சவ தினங்களில் இடம்பெறும் **முதல்நாள்** உற்சவம் தூலதேகத்தை நீக்கிக் கொள்வதற் பொருட்டு செய்யப்படுவதாகும். பரம வைத்தியராகிய சிவபெருமான் தூல சூக்குமமாகிய இருவகைப் பிரபஞ்சங்களையும் எமக்கு மருந்தாகத் தந்தது மலமாகிய நோயை நீக்கி அஞ்ஞானத்தைக் கொடுத்து, சிவஞானத்தை விளக்கி சிவானந்தப்பேறு தந்தருளுதற் பொருட்டேயாகும்.

**இரண்டாம் நாள்** உற்சவம் தூல சூக்கும தேகத்தின் வேறாகிய ஆன்மா அத்தேகத்தைத் தன்னின் வேறெனக்கண்டு பற்று நீக்குதல் வேண்டுமென்னும் பாவனையாக நடத்தப்படுகின்றது. மூன்றாம் நாள் உற்சவம் மூவினை, முப்புத்தி, முக்குணம், மும்மனம், முக்குற்றம், முப்பிறப்பு, முப்பற்று என்னும் ஏழையும் ஒழித்தற்பொருட்டு நிகழ்த்தப்படுவது இவ்வேளையில் சற்று விரித்துக்கூறுவது இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமானதாக அமையும்.

01. மூவினைகள் - ஆகாமியம், சஞ்சிதம், பிரார்த்தம் ஆகியன.

02. முப்புத்திகள் - ஐயம், விபரீதம், மயக்கம் என்பன.

03. முக்குணங்கள் - சாத்துவீகம், இராசத்தம், தாமசம் ஆகியன.

04. மும்முனம் - சித்தம், புத்தி, அகங்காரம் ஆகியன.

05. முக்குற்றம் - காமம், வெகுளி, மயக்கம் ஆகியன.

06. முப்பிறப்பு - உம்மை, இம்மை, அம்மை என்பன அவை முறையே கழிந்த பிறப்பு இப்பிறப்பு, இருபிறப்பு என்பன.

07. முப்பற்று - மண், பெண், பொன் ஆகியன.

**மூன்றாம் நாள்** உற்சவத்தினால் இவற்றை ஒழித்தற்கு வழியேற்படும். **நான்காம் நாள்** உற்சவம் மனம், சித்தம், அகங்காரம், புத்தி ஆகிய நாற்கரணமும் அண்டஜம் முதலிய நால் வகைத் தோற்றமும் நீக்குதற் பொருட்டுச் செய்யப்படுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐந்தாம் நாள்** உற்சவம் மெய் முதலிய ஐம்பொறிகளும் சாங்கிரம் முதலிய ஐந்து மலங்களும் நீங்குதற் பொருட்டு நடைபெறுவ தாகும். **ஆறாம்நாள்** உற்சவம் காமம் முதலிய உட்பகை ஆறும் கலை முதலிய அத்துவா ஆறும் இருத்தல் முதலிய கன்மல குணம் ஆறும் பதமுத்தி ஆறும் நீக்குதல் காரணமாக செய்யப்படுவ தாகும். **ஏழாம் நாள்** உற்சவம் வித்தியா தத்துவம் ஏழும், மாயாமல குணம் ஏழும் நீங்கும் பொருட்டு நடத்தப்படுவதாகும்.

**எட்டாம் நாள்** உற்சவம் எண்குணங்களும் விளங்குதற் பொருட்டு நிகழ்த் தப்படுவதாகும். **ஒன்பதாம் நாள்** உற்சவம் மூல வடிவங்களும் முக்கிருத்தியங்களும், மூன்றிடத்துறைதலும் இல்லை என்பதை குறிப்பதாகும். மூவடிவங்கள் அருவம், உருவம், அருவுருவம் என்பன முத்தொழில் சிருஷ்டி, திதி, சங்காரம் ஆகியன மூன்றிடத்துறைதல் சாலோகம், சாமிபம், சாரூபம் என்னும் பதமுத்தி மூன்றுமாவன.

**பத்தாம் நாள்** உற்சவத்தின் தத்துவம் மிகவும் சிறப்புடையது. அந்தமில்லாத இன்பத்து அழிவில்லாத வீடாகிய பரமானந்த வெள்ளத்தில் அமிழ்ந்து தற்பொருட்டுச் செய்யப்படுவது இவ்வுற்சவம் ஆகும். வளர்பிறைச்சந்திரன் ஒவ்வொரு நாளும் இருளை சிறிதுசிறிதாக நீக்கி பூரணையில் முற்றாக நீக்குவது போன்று சிவபெருமான் ஆன்மாக்களிடத்தி லுள்ள மலசுத்தியைச் சரியையிற் சரியை முதல் பதினாறு வகைப்பட்ட சிவபுண்ணியங் களுக்கேற்ப அவ்வப்பருவந்தோறும் சிறிது சிறிதாக நீக்கி நீக்குந் தோறும் நீக்குகின்ற திருவருட்சக்தியை சிறிது சிறிதாகப் பதியச் செய்து முதிர்ந்த பருவத்திலே முற்றாக நீக்கிச், சத்தியை முற்றாகப் பதியச் செய்து தாம் பிரிப்பின்றி நிற்றலை அறியவொட்டாது செய்த அறியாமையை நீக்கி அறியச் செய்து, காந்தமானது இரும்பை தன்வசமாக்கி ஒருகாலும் விடாத தன்மையைப் போல ஆன்மாவிடத்து விளங்கச் செய்து கலந்து நிற்பர். அணையிலுள் ளாகக் கட்டுப்பட்டுத் தேங்கி நின்ற ஆற்றுநீர் அவ்வணையை உடைத்து ஒரு தடையுமின்றி விரைந்து சென்று கடல்நீருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து அடங்கி மீண்டும் வராத தன்மை போல பாசஞானத்தில் அடங்கித் தடைப்பட்ட ஆன்மா அத்தடையினின்றும் நீங்கிச் சிவபெருமானுடைய திருவடிகளில் கலந்து அருள்நிறை வாயடங்கிப் பின்பு மீளுதல் இன்றி பர முத்தியில் ஆனந்த சொரூபமாய் நிற்கும் தத்துவத்தை உணர்த்து வதாக இவ்வுற்சவம் நிகழ்த்தப்படுவதாகும். இவ்வகையில் உயர்ந்த சைவசித்தாந்த உண்மைப்பொருளை உட்பொருளாகக் கொண்டது இந்த உற்சவம்.

மகோற்சவத்தில் மிருகயாத்திரை எனப்படும் வேட்டைத் திருவிழாவும் குறிப்பிடத்தக்கதாகும். இதனை சங்கார யாத்திரை எனவும் கூறுவர். பன்றி போன்ற ஆணவமலமும் மான் போன்ற கன்ம மலமும் பட்சி போன்ற மாயாமலமும் ஆகிய மும்மலங் களும் ஆன்மாவை சார்ந்துநின்று வருத்தும் தீய சக்திகளாகும். அஞ்ஞானத்தை உண்டுபண்ணுகின்ற மும்மலங்களை அடக்கிச் சிவபெருமான் சாயுச்சியம் கொடுக்கும் குறிப்பாகவே இவ்வுற் சவம் நடைபெறுவதாகும். இதனை எட்டாம் தினத்தில் செய்யலாம் என நூல்கள் கூறும்.

திருக்கோயில்களில் நடைபெறும் உற்சவங்களுள் தலையாயது தேர்த்திருவிழாவாகும். ஊர்கூடி தேர் இழுத்தல் என்ற தத்துவத்தை உணர்த்தி நிற்பது இவ்விழா நாளில் இறைவன் எழுந்தருளி அருள்பாலிக்கும் திருத்தேரின் வடத்தினை அடிய வர்கள் தொட்டு இழுத்துக் கடைத்தேற வாய்ப்பேற்படுகின்றது. இறைவனது ஐந்தொழில்களில் அழித்தல் என்னும் சம்ஹாரத் தொழிலைத் தத்துவப்பொருளாக கொண்டமைவதே தேர்த்திரு விழா.

எம்மைப் பீடித்திருக்கும் பல பந்தங்களை அழித்து நிறைந்த வாழ்வினை அருளும் திருநோக்கில் இறைவன் தேரிலே பவனி வருகின்றான். இதனை நாம் ஆக்கம் தரும் நிகழ்வாகவே கொள்ளலாம். தேரின் தோற்றப்பொலிவே தத்துவ சிறப்புமிக்கது. நான்கு சக்கரங்களையும் தேர்த்தட்டினையும் மேலே அமைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதமான அடுக்குகளையும் அவற்றின் உச்சியிலுள்ள கலசத்தையும் அதற்கு மேல் பறக்கும் கொடியினையும் அவதானிக்குமிடத்து உயிர் இறைவனை அடையச் செய்யும் வழியின் அடிப்படையையும் அதற்கான நெறியின் அமைப்பையும் காட்டி நிற்பதாக நாம் உய்த்து உணரமுடியும். தேரும் தேர் ஓட்டமும் இறைவனது திருவருள் பெருக்கத்தை எமக்கு உணர்த்துவதோடு அவனது திருவடியைத் தொழுது பேரின்ப வாழ்வைப் பெற வழிகாட்டியாக அமைந்து வழங்குவதையும் நாம் உணரலாம். எம்பெருமான் தேரின்மீது ஆரோகணித்து அருள்புரியும் வேளை எம்மைப் பீடித்துள்ள அகங்கார மமகார சிந்தனைகள் சிதறுண்டு போகின்றன. சிவபெருமானின் அட்டவீரட்டங்களுள் திரிபுரகனமும் ஒன்று. இதன் காரணமாய் எம்பெருமானுக்கு திரிபுரந்தார் என்ற திருநாமமும் உரித்தாயிற்று. முப்புரத்தைத் தகனம் செய்ய இறைவன் ரதமேறும் தெய்வீக நிகழ்ச்சியைப் புராணங்கள் போன்றுகின்றன. நம்மிடையேயுள்ள அசுரர்களாகிய மும்மலங்களையும் சங்காரம் செய்யும் தத்துவத்தையே இது குறிக்கின்றது. இதன் தத்துவத்தை திருமூலர் தமது திருமந்திரத்தில்,

**அப்பணி செஞ்சடையாதி புராதனன்**
**முப்புரஞ் செற்றன னென்பர்கள் மூடர்கள்**
**முப்புரமாவது மும்மல காரியம்**
**அப்புர மெய்தமை யாரறிவாரே.**

என கூறுகிறார்.

மகோற்சவத்தில் **தீர்த்த தினத்தை** நிச்சயித்துத்தான் துவஜாரோஹணம் செய்யப்படவேண்டுமென்பது விதியாகும். சமுத்திர தீர்த்தம் திதியை பிரதானமாகக் கொண்டதாகும். நதி முதலியவற்றில் கொடுக்கப்படும் தீர்த்தம் நட்சத்திரத்தைப் பிரதானமாகக் கொண்டது. சௌர உற்சவத்திற்குச் சங்கிராந்தி பிரதானமாகும். சாந்திர உற்சவத்திற்குத் திதி பிரதானமாகும். நட்சத்திர உற்சவத்திற்கு நட்சத்திரம் முக்கியமானதாகும். தீர்த்தோற்சவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயத்தில் கொள்வது உத்தமமாகும். மத்தியானத்தில் கொள்வது மத்திமம் அதற்கு மேற்பட்ட காலங்களில் கொள்வது அதம மாகும். பூர்வானத்தில் உதயாதி மூன்று நாழிகை உத்தமமாகும். மூன்று நாழிகைக்கு மேல் ஏழு நாளிகை வரை கொள்வது மத்திமமாகும். அதன் மேல் பத்து நாழிகை வரை கொள்வது அதமமாகும்.

ஆறு, குளம், சமுத்திரம் முதலிய இடங்களுக்கு பரமசிவன் திருவுலாக் கொண்டு எழுந்தருளுவது ஆன்மாக் களுக்கு அருள் செய்யும் குறிப்பதாகும். சிவபெருமானது திருவருட்சக்தி நீர் வடிவாய் அமைந்து தன்னை அடைந்து தரிசித்து நீராடும் அடியவர்களது பிறவியாகிய வெப்பத்தை நீக்கி தன்னிடத்தில் அமிழ்ந்தச் செய்து தத்துவாதீதராய் விளங்குஞ் சிவத்துடன் கூடும் தீர்த்த கா லத்தில் திருவருள் என்னுந் தீர்த்தத்தை அடைந்து நீராடி மெய்யன்போடு சிவத்தலங்களை வழிபடின் பிறவிக்கு வித்தாகிய மும்மலங்களும் நீங்கி, அடியார்கள் சிவானந்த முத்தியடைவார்கள்.

தீர்த்தோற்சவம் ஐந்தொழில்களில் அருளலைச் சுட்டும் தீர்த்தோற்சவத்தை அடுத்து சுவாமி வீதிவலம் வந்து கோயிலுக்கு திரும்பியதும் யாக கும்பங்களை மூலமூர்த்திக்கு அபிஷேகம் செய்தல் முக்கியத்துவம் பெறும் சிவயாகத்தின் நிறைவின் பொருட்டும் உலகங்களை பாதுகாத்தல் பொருட்டும் யாக கும்பாபிஷேகம் நிகழ்த்தப்படுகின்றது. மௌனோற்சவமும் உயர் தத்துவ பொருளைக் கொண்டது. சிவம் மற்றெல்லாப் பொருளிலும் உள்ளும் புறமும் வியாபித்து நிற்பதை அறிந்து எல்லாப் பொருள்களுஞ் சிவமெனக் காணும் அனுபவத்தை தருவதாகும். இந்த ஞானநிட்டையை ஆன்மா அடைய வேண்டுமென்னுங் குறிப்பாகவே மௌனோற்சவம் நடைபெறு கின்றது. மகோற்சவத்தின் இறுதி அம்சமாக துவஜாவரோகணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஸ்தவேதா விசர்ஜனம் சந்தி விசர்ஜனம், சண்டேஸ்வர உற்சவம், ஆசார்ய உற்சவம் ஆகிய இடம்பெறும்.


கொடியிறக்கம் ஐந்தொழில் முடிபையும் ஆன்மாக்கள் முத்தியடைதலையும் விளக்கும் சண்டேஸ்வரர் உற்சவத்தை பக்தியுடனும் மனஉறுதியுடனும் செய்பவர்கள் சிவோற்சவ பயனை அடைவர். ஆச்சாரிய உற்சவத்தில் முறைப்படி சிவாச்சாரியாரை மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரண சுத்தியுடன் சிரத்தையோடு வழிபடுவோர் போகங்களையும் மோட்சத்தையும் அடைவர்.

இவ்வாறு மகோற்சவத்தினால் சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம், சிவஞானம் ஆகிய அனுபவங்கள் கிடைப்பன. மகோற்சவத்தினால் சாம்பவீ தீட்சை பெற்ற பலனை உயிர்கள் பெறுகின்றன. மகோற்சவ தினங்கள் ஒவ்வொன்றும் உயர்தத்துவ பொருளை சுட்டி நிற்கின்றன. சிவஞானப்பேற்றை பெற்றுய் வதற்கு மகோற்சவம் ஆன்மாக்களுக்கு சிறந்த சந்தர்ப்பத்தை அழிக்கின்றது. எனவேதான் ஆலயங்கள் தோறும் மகோற் சவங்கள் வருடத்திற்கு ஒரு முறை பக்திபூர்வமாக நடாத்தப்படு கின்றன.

**ஆலய சிவாச்சாரியார், அர்ச்சகர், பரிபாலகர், வழிபடு வோர் அனைவரும் ஒன்றிணைந்து அனைவரும் சிவனடி யார்கள் என்ற உணர்வுடன் நிகழ்த்தப்படுவதே மகோற்சவம். மகோற்சவ தத்துவங்களையும் உட்பொருளையும் உணர்ந்து சிவநெறியில் நிற்க மகோற்சவ புண்ணிய தினங்கள் உறு துணைபுரிகின்றன என்பதை நாம் ஒவ்வொரு வரும் இதய சுத்தியுடன் உணர்ந்து அறநெறிநின்று உய்வு பெறுவோமாக.**

நன்றி: **இலண்டன் சிவன்கோயில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கோயில் மாதிரி அமைப்பு

பதிப்பு: 14.4.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மகோற்சவ தத்துவங்கள்



நன்றி

கட்டுரை ஆக்கம்


பேராசிரியர் கலாநிதி **ப. கோபாலகிருஷ்ண ஐயர்**

தலைவர், இந்து நாகரிகத்துறை,

யாழ். பல்கலைக்கழகம்


★

"சப்பர வெள்ளோட்ட மலர்"

காரைக்கால் சிவன் கோயில் தேவஸ்தானம்

இணுவில் – கோண்டாவில்

★


வெளியீடு: **நடராசா சச்சிதானந்தன்**

நிறுவுனர், இலண்டன் சிவன் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org